**நிதியுதவி வழங்கும் போது கருத்திற்கொள்ளப்படும் எடுகோல்கள்**

- அங்கீகரிக்கப்பட்ட அறுவை சிகிச்சையாக /சிகிச்சையாக இருத்தல்.
- அறுவை சிகிச்சை/சிகிச்சை அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
  - அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகளின் பட்டியலை QR குறியீட்டின் ஊடாக அல்லது www.presidentsfund.gov.lk எனும் இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாக அல்லது உங்கள் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
- உரிய காலப்பகுதிக்குள் மருத்துவ உதவிக்கான விண்ணப்பத்தை கையளித்தல்.
- நோயாளி மற்றும் அனைத்து குடும்ப உறுப்பினர்களின் மாதாந்த வருமானங்களின் கூட்டுதொகை ரூ. 200,000.00 இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
  - விவாகமான பிள்ளைகளின் வருமானம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விவாகமாகாத பிள்ளைகளின் மாதாந்த வருமானத்தில் 50% குடும்ப வருமானத்தில் கருத்தில் கொள்ளப்படும்.
- அறுவை சிகிச்சைக்கு/ சிகிச்சைக்குத் தமது சொந்த சொத்துக்களைப் பயன்படுத்தி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அந்த செலவுகள் மீளளிப்பு செய்யப்பட மாட்டாது.
- ஏனைய நன்கொடைகள், காப்புறுதி அல்லது வேறு ஏதேனும் முறையின் ஊடாக செலவழிக்கப்பட்ட தொகையில் 50% ஆன தொகை வழங்கப்பட்டிருக்காமை.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்ச நிதியுதவியைப் பெற்றிருக்காமை.
- உண்மையான மற்றும் சரியான தகவல்களை வழங்கி இருத்தல்.

**இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள்**

- நீங்கள் வசிக்கும்-5-பிரதேசத்திற்கு உரிய கிராம உத்தியோகத்தரின் மூலம்
- நீங்கள் வசிக்கும் பிரதேசத்திற்கு உரிய பிரதேச செயலகத்தின் மூலம்
- சனாதிபதி நிதியத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம்
  - தொலைபேசி இல - 011-2354354
    உள் இணைப்பு - 4800
- www.presidentsfund.gov.lk எனும் சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் ஊடாக
- சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தின் (Facebook page) மூலம்
- சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ யூடியூப் அலைவரிசைக்கு (YouTube Channel) பிரவேசிப்பதன் ஊடாக

**"நாம் எப்போதும் நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்பட்டு நலன்கள் அவசியமாயின் மாத்திரம் அவற்றை பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் நோயாளியாக மாறக்கூடிய ஒருவரின், எமது உறவினர் ஒருவரின் உயிரைக் காப்பதற்காக பங்களிப்போம்!"**

சனாதிபதி நிதியம்
தரைத்தளம்,
ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடம்,
சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

தொலைபேசி - 0112354354 - உள் இணைப்பு - 4800
தொலைநகல் இல - 0112331243
வாட்ஸ் அப் இல- 0740854527
மின்னஞ்சல் - fundsecretary@presidentsoffice.lk
இனையத்தளம் - www.presidentsfund.gov.lk

**சனாதிபதி நிதியம் உங்கள் பிரதேசத்திற்கு..**

சனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் மருத்துவ உதவிகளுக்கான விண்ணப்பங்களை கையளிப்பதற்காக தற்போது நீங்கள் கொழும்புக்கு வருகைத்தர வேண்டிய அவசியமில்லை.

தற்போது நீங்கள் வசிக்கும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலகத்திற்கு சென்று மருத்துவ உதவிகளுக்கான விண்ணப்பங்களை உங்களால் கையளிக்க முடியும்.

**சனாதிபதி நிதியத்தின் மூலம் நிதியுதவி பெற்றுக்கொள்ளக்கூடிய அறுவை சிகிச்சைகள்/ சிகிச்சைகள் மற்றும் நிதியுதவியின் அளவு**

| | | |
|---|---|---|
| **இருதய அறுவை சிகிச்சை** | | |
| பைபாஸ் அறுவை சிகிச்சை(CABG) | - | அதிகபட்சம் ரூ.250,000.00 வரை |
| ஸ்டென்ட் அறுவை சிகிச்சை(PCTA) | - | அதிகபட்சம் ரூ.300,000.00 வரை |
| மேற்குறித்த அறுவை சிகிச்சைகள் உள்ளடங்களாக இதயம் சார்ந்த 37 அறுவை சிகிச்சைகளுக்கு | | |
| **சிறுநீரகங்கள் சார்ந்த சிகிச்சைகள்/ அறுவை சிகிச்சைகள்** | | |
| சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை | - | அதிகபட்சம் ரூ.500,000.00 வரை |
| வெளியக குருதி சுத்திகரிப்புச் செயன்முறை | - | அதிகபட்சம் ரூ.500,000.00 வரை |
| **புற்றுநோய் சிகிச்சைகள்** | | |
| புற்றுநோய் சிகிச்சைகளுக்கு அதிகபட்சம் ரூ.500,000.00 வரை | | |
| **மூளை சார்ந்த அறுவை சிகிச்சைகள்** | | |
| Brain Tumor | - | செலவில் 1/3 பகுதி அல்லது அதிகபட்சம் ரூ.600,000.00 வரை |
| மேற்குறித்த அறுவை சிகிச்சைகள் உள்ளடங்களாக மேலும் 08 அறுவை சிகிச்சைகளுக்கு | | |
| **எலும்பியல் உள்வைப்பு(Orthopaedic Implant)** | | |
| இடுப்பு எலும்பு மாற்று சிகிச்சை(Hip) | -1- | அதிகபட்சம் ரூ. 300,000.00 வரை |
| முழங்கால் மாற்று சிகிச்சை (Knee) | - | அதிகபட்சம் ரூ.300,000.00 வரை |
| தோள்பட்டை மாற்று சிகிச்சை (Shoulders) | - | அதிகபட்சம் ரூ.300,000.00 வரை |

| | | |
|---|---|---|
| **முதுகுத் தண்டுவடம் சார்ந்த அறுவை சிகிச்சைகள்** | - | ரூ.300,000.00 வரை |
| **எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை** | | |
| எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை | - | ரூ. 600,000.00 வரை |
| ஆரம்ப கலங்கள் மாற்று சிகிச்சை | - | ரூ. 600,000.00 வரை |
| **கல்லீரல் சார்ந்த அறுவை சிகிச்சைகள்/ சிகிச்சைகள்** | | |
| கல்லீரல் மாற்று சிகிச்சை | - | ரூ. 600,000.00 |
| அறுவை சிகிச்சைக்கு முன்னரான/பின்னரான சிகிச்சை மற்றும் மருந்துகளுக்காக | - | ரூ. 300,000.00 |
| **சிறுவர்களுக்கான கல்லீரல் மாற்று சிகிச்சை** | | |
| 16 வயதிற்கு கீழ்பட்ட சிறுவர்களுக்கு ராகம வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் கல்லீரல் மாற்று சிகிச்சைக்கு | - | ரூ. 1,000,000.00 |
| | | |
| **உட்செவிசுருள் பதியம்** | | ரூ. 600,000.00 |
| **செவித்திறன் கருவிகள்** | | செலவு ரூ.400,000.00 இற்கு குறைவாயின் அதில் அரைவாசி அல்லது அதிகபட்சம் ரூ. 300,000.00 வரை |
| **பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை/ OMF அறுவை சிகிச்சை** | | ரூ. 100,000.00 |



**விண்ணப்பித்தல்**

சனாதிபதி நிதியத்தின் மூலம் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான ஏனைய ஆவணங்களுடன் நீங்கள் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள்**

- www.presidentsfund.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்யலாம்.
- QR குறியீட்டின் மூலம்

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**

- அறுவை சிகிச்சைக்கு/ சிகிச்சைக்கு 30 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பத்தை கையளிக்க முடியும்.

அவ்வாறு இல்லையேல்

- அறுவை சிகிச்சை/ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வைத்தியசாலையில் இருந்து வெளியேறி 60 நாட்கள் கடப்பதற்கு முன்னர் கையளிக்க முடியும்.

**அவசியமான ஏனைய ஆவணங்கள்**

- நோயுடன் தொடர்பான வைத்தியரின் பரிந்துரையின் மூலப்பிரதி
- அறுவை சிகிச்சைக்கு/ சிகிச்சைக்கு முன்னர் விண்ணப்பம் கையளிக்கப்படுமாயின்,
  - அறுவை சிகிச்சைக்கான/ சிகிச்சைக்கான செலவு மதிப்பீட்டின் மூலப்பிரதி
- அறுவை சிகிச்சையின்/ சிகிச்சையின் பின்னர் விண்ணப்பம் கையளிக்கப்படுமாயின்,
  - அறுவை சிகிச்சைக்குரிய/ சிகிச்சைக்குரிய கொடுப்பனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதி (Receipts)



- நோயாளி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வங்கி கணக்குகள் பற்றிய அறிக்கை (அண்மைய 03 மாதங்களுக்குரியவை)
- நோயாளியின் தேசிய அடையாள அட்டையின் ஒரு நிழற்பிரதி
- நோயாளி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் (மனைவி அல்லது கணவன்/விவாகமாகாத பிள்ளைகள்) வருமான விபரம்
- சத்தியக்கடதாசி
- கடன் பெறுகைகள், தங்க நகை அடகு வைப்புக்கள் இருப்பின் அவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களின் பிரதிகள்
- அவசியமான ஏனைய ஆவணங்கள்

**உங்களுக்கு நலன்கள் கிடைக்கப்பெறும் முறை**

- நீங்கள் அறுவை சிகிச்சையை/ சிகிச்சையை பெற்றுக்கொண்ட பின்னர் நிதியுதவிக்காக விண்ணப்பித்திருக்கும் போது சனாதிபதி நிதியத்தினால் நீங்கள் நிதியுதவி பெறத் தகுதியானவர் என தேர்ந்தெடுக்கப்படுவீர்களாயின் நீங்கள் உரிய பிரதேச செயலகத்தின் ஊடாக நிதியைப் பெற முடியும்.

- நீங்கள் அறுவை சிகிச்சைக்கு/ சிகிச்சைக்கு முன்னர் நிதியுதவிக்காக விண்ணப்பித்திருக்கும் போது சனாதிபதி நிதியத்தினால் நீங்கள் நிதியுதவி பெறத் தகுதியானவர் என தேர்ந்தெடுக்கப்படுவீர்களாயின் அறுவை சிகிச்சைக்கு/ சிகிச்சைக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் உரிய வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிட்டு ஒரு பொறுப்புக்கூறல் கடிதம் சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும்.

(நீங்கள் அறுவை சிகிச்சையை/ சிகிச்சையை பெற்றுக்கொண்ட பின்னர் உரிய வைத்தியசாலையினால் வழங்கப்படும் செலவுப்பட்டியல்கள் முன்வைக்கப்பட்டு சனாதிபதி நிதியத்தால் நிதி மீளளிப்புச் செய்யப்படும்)